**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (26.2.2021) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, எரிசக்தித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, தொழில் துறை, சட்டத்துறை, உயர்கல்வித் துறை, தொழில் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, உள் (போக்குவரத்து) துறை ஆகிய துறைகளின் சார்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் 240 கோடியே 29 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1,137 காவலர் குடியிருப்புகள், 3 காவல் நிலையங்கள், 5 காவல்துறை கட்டடங்கள், 3 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்கள், 6 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். மேலும் 2 கோடியே 95 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 7 காவல் ஆணையரக அலுவலகங்கள் மற்றும் 31 மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களை துவக்கி வைத்தார்கள். காவல்துறையின் பயன்பாட்டிற்காக 70 நான்கு சக்கர வாகனங்கள், 109 இருசக்கர வாகனங்களை வழங்கினார்கள். அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்படும் பெண்கள் உதவி மையத்தை மேம்படுத்தும் வகையில் 800 மடிக்கணினிகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்று, தமிழ்நாட்டில் பாலின முன்னோக்குடன் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைதல், திட்டமிடல், ஆளுகை மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்கான வாய்ப்புகளை பெண்களுக்கு ஏற்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்திடும் வகையில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை

மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்புகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, சிவகங்கை, புதுக்கோட்டை, செங்கல்பட்டு, திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 384 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4,557 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 5 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 சேமிப்புக் கிடங்குகள், கூட்டுறவுத் துறை சார்பில் இராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

எரிசக்தித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் காங்மேன் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 9613 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் 10 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் குடியிருப்பு கட்டடம், ஒரு ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் மற்றும் 2 பாலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மீன்வளத் துறையின் சார்பில், செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் கிராமத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படவுள்ள மீன் விதைப் பண்ணை மற்றும் புதிதாக கட்டப்படவுள்ள பயிற்சி மையக் கட்டடம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம்,

திருச்சிராப்பள்ளி மாநகரில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளத்துறை துணை இயக்குநர் அலுவலகம், உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம்; கடலூர் மாவட்டம், கடலூரில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளத்துறை துணை இயக்குநர் அலுவலகம், உதவி இயக்குநர் அலுவலகம், மீன்பிடி துறைமுக திட்ட உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மற்றும் பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம்; திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் கிராமத்தில் 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் பயிற்சி மையக் கட்டடம், என மொத்தம் 109 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பால்வளம் மற்றும் மீன்வளத் துறை கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம் – திருக்குவளையில் 60 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், இராணிப்பேட்டை மாவட்டம் – வாலாஜாவில் 60 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

பால்வளத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) சார்பில், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை; விருதுநகர் மாவட்டம், ஈஞ்சாரில் 70 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள அதிவெப்ப நிலையில் பாலை பதப்படுத்தி (Ultra High Temperature) சுவையூட்டப்பட்டு டெட்ரா பாக்கெட்டுகளில் நிரப்பிடும் தொழிற்சாலை;

சட்டத்துறை சார்பில் தருமபுரி அரசு சட்டக் கல்லூரிக்கு 69 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம் மற்றும் மதுரை அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் 9 கோடியே 96 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். மேலும், மதுரை, தல்லாக்குளத்தில் உள்ள மதுரை

அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் 40 கோடியே 8 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய நிர்வாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

உயர்கல்வித் துறை சார்பில் விழுப்புரம் டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை துவக்கி வைத்தார்கள். மேலும், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தில் 15 கோடியே 79 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள், அறிவியல் கல்வி நிறுவனக் கட்டடங்கள், மகளிர் விடுதிக் கட்டடம், உள்விளையாட்டரங்கம் மற்றும் புதிய அறிவியல் கட்டடத் தொகுதி, ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிப்பாளையம், நம்பியூர் திட்டமலை பகுதியில் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தொழில் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் அலகு–IIல் அடுக்கு காகித அட்டை ஆலை விரிவாக்கத் திட்டத்தின் முதல் கட்டமாக 1,100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு மற்றும் இரசாயன மீட்பு கொதிகலன் உற்பத்திக்கான பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். மேலும், 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் திருப்பூர் கிளை அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக அலுவலக தொகுதிக் கட்டடம் மற்றும் செங்கல்பட்டு அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் அமைக்கப்படவுள்ள கைரேகை சட்டத்தினை எதிர்த்து போராடிய வீரத் தியாகிகளின்

நூற்றாண்டு நினைவு மணிமண்டபத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள். மேலும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகராதிகளின் திருந்திய பதிப்புகளாக 7 மடலங்கள் மற்றும் மாணவர் தமிழகராதி, அயற்சொல் அகராதி, நடைமுறைத் தமிழகராதி ஆகியவற்றை வெளியிட்டார்கள். கனடாவில் உள்ள டொராண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான 1 கோடி ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள தேவர்தந்த தேவர் கல்வித் தந்தை ஐயா மூக்கையாத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலை, திருமங்கலம், கள்ளிக்குடியில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர போராட்ட வீரதியாகிகள் மாமன்னர் மருதுபாண்டியர்களின் திருவுருவச் சிலை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்ட குறைந்த விலை மதிப்பை பதிவு செய்த 4 நிறுவனங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று ஏற்பு ஆணைகளை (Letter of Acceptance) வழங்கினார்கள்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் அருங்காட்சியகங்கள் துறையின் சார்பில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 70 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று சிற்பப் பூங்காக்கள், படிமக் கூடங்களில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள குளிர்சாதன வசதிகள், 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புனை மெய்யாக்கம் மற்றும் மெய்நிகர் காட்சி அமைப்புகள், 1 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள காணொலி காட்சித் திரைகள், 50 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள நேரடி புனை மெய்யாக்க காட்சியமைப்பு ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். மேலும், தேனி மாவட்டம் – ஆண்டிபட்டி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் –

திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசு அருங்காட்சியகங்களை திறந்து வைத்தார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில், 113 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி மாவட்டம் அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள அன்னதானக்கூடம், தூத்துக்குடி மாவட்டம், அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள அன்னதானக்கூடம், திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு மல்லிகார்ஜீனசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள அன்னதானக்கூடம், திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள அன்னதானக்கூடம், திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு புத்திரகாமேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம், திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம், திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு மல்லிகார்ஜீனசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம், திருவண்ணாமலை நகர் மற்றும் மாவட்டம், அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி (யாத்ரி நிவாஸ்), கரூர் மாவட்டம், அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக நிறுவப்பட்ட பயணியர் கம்பி வட ஊர்தி சேவை (சோதனை ஓட்டம்), இராமநாதபுரம் மாவட்டம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் மாவட்டம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதிகள், காஞ்சிபுரம் மாவட்டம், அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் மற்றும் பாஷ்யகாரசுவாமி திருக்கோயில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ இராமனுஜர் திருக்கோயில் மணிமண்டபம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

உள் (போக்குவரத்து) துறை சார்பில் கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக 1 கோடியே 15 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். மேலும், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் 3 கோடியே 72 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் தேர்வுத்தளம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்கள்

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**